தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 29, திருவள்ளுவர் ஆண்டு—2053

2023 ஜனவரி 13, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பான் உடம்பு."

தன்னைச் சார்ந்துள்ள குடிகளுக்குத் துன்பம் வராமல் தடுத்துத் தொடர்ந்து அக்குடிகளைக் காப்பாற்ற முயலுகிற ஒருவன், துன்பத்தைத் தாங்கிக்கொள்ளவே பிறந்தவனாகப் போற்றப்படுவான்.

1. இரங்கற்குறிப்பு

திரு. க. உக்கிரபாண்டியன், முன்னாள் உறுப்பினர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற்குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. க. உக்கிரபாண்டியன் அவர்கள் 31–12–2022 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. க. உக்கிரபாண்டியன் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் பரமக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [2023 ஜனவரி 13

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

திரு. சரத் யாதவ், முன்னாள் ஒன்றிய அமைச்சர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரங்கல் தீர்மானம். முன்னாள் ஒன்றிய அமைச்சர் திரு. சரத் யாதவ் அவர்கள் 12–1–2023 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

ராஷ்ட்ரிய ஜனதா தளத்தின் மூத்த தலைவராகவும், மதச் சார்பற்ற ஜனதா தள தேசியத் தலைவராகவும் இருந்த திரு. சரத் யாதவ் அவர்கள் பொறியியல் இளங்கலை படிப்பில் தங்கப் பதக்கம் பெற்றவர். மதச் சார்பின்மை, சமூக நீதி, ஜனநாயகம் ஆகிய கொள்கைகளில் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர். மக்களவைக்கு ஏழு முறையும், மாநிலங்களவைக்கு இரு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்றிய அமைச்சர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றியவர்.

அன்னாரது மறைவால் அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், ராஷ்ட்ரிய ஜனதா தள கட்சித் தொண்டர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)